முருகப்பெருமான் துணை

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.05.2022, செவ்வாய்கிழமை

1. அவதார ஞான தேசிகனே
ஆற்றல் மிக்க உலகம் அமைக்க
அவதாரம் புரிந்த அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது தகர் திங்கள்
இருபானேழ் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 27 ம் நாள், 10.05.2022 செவ்வாய்கிழமை)
இயம்புவேன் நொண்டிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் தருமம் புரியும் அரங்கன்
தானமான அன்னதான வழிகளை
தரணியோர் கடைபிடித்து வர
4. வருகவே மக்களிடை மாற்றம்
வந்தடையும் தரும பலமாக
முருகப்பெருமான் வழிபாட்டை
முழுமை ஞானமாகச் செய்துவர
5. வருகவே மக்களிடை தெளிவும்
வளர்ச்சி நிலைகளும் வந்தடையும்
முருகா எனும் செபதபம் முழங்க
முழுமைபட உலகம் மாற்றம் காணும்
6. காணவே அரங்கஞானி வழிகாட்டல்
கலியிடரை போக்கும் வண்ணமும்
ஞானயுகம் படைக்கும் சூட்சுமமாகயிருக்க
நம்பிக்கை வைத்துவரும் மக்கள் வழி
7. மக்கள்வழி மாற்றம் உண்டாகும்
மக்களெல்லாம் மகான்களாகி
தேக்கமின்றி நல்லுலகம் அமைய
தேர்வுசெய்வர் ஞானத்தலைமை தன்னை
8. தன்னிலே ஞானவான்கள் நிறைந்த
தனிப்பெருஞ் சபை நிரம்பி
இன்னலில்லா பெருவாழ்வாக
எங்கும் அமைதி குறையா வண்ணம்
9. வண்ணமுடன் மகிழ்வு பாதுகாப்பு
வளர்ச்சியான பொருள் பலமும்
எண்ணம் தூய்மை எதிலும் தூய்மை என
இயம்பிடுவேன் எல்லா பலமும் கிட்டி

10. கிட்டியே இந்தப் பேருலகம்
குருபரன் தலைமைகீழ் வரும்
கட்டம் என்பதே இல்லாதபடி
கருணை தயவை பெருக்கும்படி

11. பெருக்கும்படி செயல்வடிவம் கூடி
பேருலகில் மாற்றம் காணும்
வருத்தமில்லா ஞான வாழ்வாக
வணங்கி வரும் மக்கள் கண்டுதேறுவர்

அருளாசி முற்றே

–சுபம்–